Kovilor Digital Library

ACCNO
15261
Q2 4173

விநாயக கவசம்

Koviloor Digital Library

Koviloor Digital Library 15261

உ

கடவுள் துணை

விநாயக கவசம்

சிவகவசம், சத்திகவசம்,
சரஸ்வதி தோத்திரம், இலக்குமி
தோத்திரம், விநாயக திருவருட்பா

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A No. 15261

பதிப்பாளர் :
ஆர். ஜி. பதி கம்பெனி
சென்னை—1.

விலை] 1955. [அணா 4.

Koviloor Digital Library

விஷய அட்டவணை

எண்.	பெயர்.	பக்கம்.
1	விநாயக கவசம்	3
2	சிவ கவசம்	16
3	சத்தி கவசம்	31
4	சரஸ்வதி தோத்திரம்	42
5	இலக்குமி தோத்திரம்	50
6	விநாயகர் திருவருட்பா	56

Koviloor Digital Library

விநாயக கவசம்

ஆதியில் இக்கவசத்தைக் காசிப முனிவர் முற்கல முனிவருக்கு அருளிச்செய்ய, அவர் மாண்டவிய முனிவருக்கு அநுக்கிரகிக்க, அவர் மரீசி முனிவருக்கு உபதேசித்தருள, அவர் பல முனிவர்களுக்குத் திருவாய் மலர்தருளிச் செய்தன வென்றறிக.

Koviloor Digital Library

நித்திய கருமங்களை முடித்துப் பரிசுத்தமாகிய ஓரிடத்தில் இருந்துகொண்டு ஒன்றுபட்ட மனசுடனே விநாயகரைத் தியானித்து இதைச் செபிக்க வேண்டும்.

நூல்.

வளர்சிகையைப் பராபரமாய்
வயங்குவிநா யகர்காக்க
வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந்
தாதேகம தோற்கடர்தா
மமர்ந்து காக்க

1

விளாறநெற் றியையென்றும்
விளங்கியகா சிபர்காக்க
புருவந் தம்மைத்
தளர்வின்மகோ தார்காக்க
தடவிழிகள் பாலசந்
திரனார் காக்க.
கவின்வளரு மதரங்கச
முகர்காக்க தாலங்கணக்
கிரீடர் காக்க
நவில்சிபுகங் கிரிசைசுதர்
காக்கநனி வாக்கைவி
நாயகர்தாங் காக்க

Koviloor Digital Library

அவிர்நகைதுன் முகர்காக்க
வள்ளெழிற்செஞ் செவிபாச
பாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல்
வளர்மணிநா சியைச்சித்தி
தார்த்தர் காக்க.
காமருபூ முகந்தன்னைக்
குணேசர்நனி காக்ககளங்
கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும்
வயங்குகந்த பூர்வசர்தா
மகிழ்ந்து காக்க

Koviloor Digital Library

ஏமமுறு மணிமுலைவிக்
கினவிநா சன்காக்க
விதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர்
காக்கவகட் டினைத்துலம்பே
ரம்பர் காக்க.
பக்கமிரண் டையுந்தரா
தார்காக்க பிருட்டத்தைப்
பாவ நீக்கும்
விக்கினக ரன்காக்க
விளங்கிலிங்கம் வியாளபூ
டணர்தாங் காக்க

Koviloor Digital Library

தக்கருய்யந் தன்னைவக்
கிராண்டர் காக்கசக
னத்தை யல்லல்
உக்கணை பன்காக்க
ஊருவைமங் களமூர்த்தி
யுவந்து காக்க.
தாழ்முழந்தாள் மகாபுத்தி
காக்கவிரு பதமேக
தந்தர் காக்க
வாழ்காங்கிப் பிரப்பிரசா
தனர்காக்க முன்கையை
வணங்கு வார்நோய்

Koviloor Digital Library

ஆழ்நாச்செய் யாசாபூ
ரகர்காக்க விரல்பதும
வத்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா
யகர்காக்க கிழக்கினிற்புத்
திசர் காக்க. 5
அக்கினியிற் சித்திசர்
காக்கவுமா புத்திரர்தென்
றிசை காக்க
மிக்கநிரு தியிற்கணே
சுரர்காக்க விக்கினவர்த்
தனர்மேற் கென் றுந்

Koviloor Digital Library

திக்கதனிற் காக்கவா
யுவிற்கசகன் னன்காக்க
திகழு திசி
தக்கநிதி பன்காக்க
வடகிழக்கி லீசநந்
தனரே காக்க.
ஏகதந்தர் பகன்முழுதுங்
காக்கவிர விணுஞ்சந்தி
யிரண்டன் மாட்டும்
ஓவகயின்விக் கினகிருது
காக்கவிராக் கதர்பூத
முறுவே தாள

Koviloor Digital Library

மோகினிபே யிலையாதி
யுயிர்த்திறத்தால் வருந்துயரு
முடிவி லாத
வேகமுறு பிணிபலவும்
விலக்குபுபா சாங்குசர்தாம்
விரைந்து காக்க. 7

மதிஞானந் தவந்தான
மானமொளி புகழ்குலம்வண்
சரீர முற்றும்
பதிவான தனந்தானி
யங்கிரக மனைவிமைந்தர்
மயினட் பாதிக்

Koviloor Digital Library

கதியாவுங் கலந்துசர்வா
யுதர்காக்க காமர்பவுத்
திரர் முன்னான
விதியாருஞ் சுற்றமெலா
மயூரேச ரெஞ்ஞான்றும்
விரும்பிக் காக்க. 8
வென்றிசீ விதங்கபிலர்
காக்ககரி யாதியெலாம்
விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக்
காலமுமோ திடினும்பா
விடையூ றொன்றும்

Koviloor Digital Library

ஒன்றுரு முனிவரவர்கா
ளறிமின்கள் யாரொருவ
ரோதி னாலு
மன்றவாங் கவர்தேகம்
பிணியறவச் சிரதேக
மாகி மன்னும். 9

விநாயக கவசம் முற்றிற்று.

Koviloor Digital Library

பக்தியுடனே இக் கவசத்தைப் பாராயணஞ் செய்பவர்களுக்குப் பிணியும், வறுமையும், பேய் பூதங்களா லுண்டாகின்ற பல துன்பங்களும், கவலைகளும், பாவ முதலியவைகளும் நீங்கும். அன்றியும், பெருஞ் செல்வமும், தீர்க்காயுளும், களத்திர புத்திர மித்திராதிகளும் உண்டாகும். அன்றியும், யாத்திரையிலே இதைச் செபித்தால், சகல விக்கினமும் போய்ப் பயன்களெல்லாம் கைகூடும். யுத்தத்திலே இதனைச் சொன்னால் ஜயமுண்டாகும். இருபத்தொருநாள், நாள் ஒன்

Koviloor Digital Library

ருக்கு எழுமுறை தோத்திரஞ் செய்தால், மாரணம் நீங்குவதன்றி உச்சாடனம் ஆக்ருஷணம் ஸ்தம்பன முதலியவைகள் பயனறும். இருபத்தொரு தரஞ் செபித்தால், சிறையிருப்பு விடுதலாவது மன்றி, அரசர்களுடைய நிஷ்டூரமும் நீங்கும். அரசனைக் காணப் போகும்போது பத்தியினால் மூன்றுதரம் இதை ஓதினால் அவன் வசப்படு வான். இதைப் படித்தாலும், ஒருவர் சொல்லக் கேட்டாலும், பூசித்தாலும், எப்படிப்பட்ட துன்ப மும் நீங்கும்.

Koviloor Digital Library

சிவ கவசம்

இந்தக் கவசம் பத்திராயுவென்னும் இராச குமாரனுக்கு விடபமுனி அருளிச் செய்ததென்று நைமிசாரணிய முனிவருக்குச் சூதமகாமுனிவர் அநுக்கிரகித்தது.

பங்கயத் தவிசின் மேவி
    யிருந்துடற் பற்று நீக்கி
யங்குநற் பூத சுத்தி
    யடைவுடன் செய்த பின்னர்க்

Koviloor Digital Library

கங்கையைத் தரித்த சென்னிக்
கற்பக தருவைச் செம்பொற்
கொங்கைவெற் பனைய பச்சை
கொடியொடு மூலத்தில் வைத்தே. 1

அகிலநா யகனாய் ஞான
வானந்த ரூபி யாகித்
தகடரு மனுவாய் வெற்பின்
றேற்றமா யுயிரை யெல்லாந்
தகவுட னவனி யாகித்
தரிப்பவ னெம்மை யிந்த
மகிதல மதனற் றீமை
மருவிடா தருளிற் காக்க. 2

Koviloor Digital Library

குளைபுன லுருவங் கொண்டு
சூழ்தொறும் பயன்க ளல்கித்
தளையிடை யுயிர்கள் யாவுந்
தளர்ந்திடா வண்ணங் காப்போ
னிளைநிலா முகில்க ளீண்டி
நெடுவரை முகட்டிற் பெய்யும்
விளைபுன லதனுள் வீழ்ந்து
விளிந்திடா தெம்மைக் காக்க. 3

கடையுகந் தன்னி லெல்லா
வுலகமுங் கடவுட் டீயா
னடலைசெய் தழலை தாள
மைதா நடிக்கு மீச

Koviloor Digital Library

விடைநெறி வளாதா பத்தி
வெறிதரு குறைக் காற்றிற்
றடைபடா தெய்வமை யிந்தத்
தடங்கட லுலகிற் காக்க. 4

ஆயகண் மூன்றி னோடு
சுடரும்பொன் வதன நான்கும்
பாயுமான் மழுவி னோடு
பகர்வர தாபயங் கண்
ணேயைதிண் புயங்க ளன்கு
மிளிருமின் னனைய தேசு
மாயதற் புருட னெம்மைக்
குணதிசை யதனிற் காக்க. 5

Koviloor Digital Library

மான்மழு சூலந் தோட்டி
    வளைதரு மக்க மாலை
கூன்மலி யங்கு சந்தித்
    தமருகங் கொண்ட செங்கை
நான்முக மூக்க ணீல
    நள்ளிருள் வருணங் கொண்டே
ஆன்வரு மகோர மூர்த்தி
    தென்றிசை யதனிற் காக்க. 6

திவண்மறி யக்க மாலை
    செங்கையோ ரிரண்டுந் தாங்க
அவிர்தரு மிரண்டு செங்கை
    வரதத்தோ டபயந் தாங்கத்

இ உ கஉசக.

Koviloor Digital Library

கவினிறை வதன நான்கும்
    கண்ணொரு மூன்றுங் காட்டுந்
தவளமா மேனிச் சத்தியோ
    சாதன்மேற் றிசையிற் காக்க. 7

மறைகெழு மனுவு மாலு
    மபயமும் கண்ணி னுமம்
அறைதரு தொடையுஞ் செய்ய
    வங்கைக நான்கு மேந்திப்
பொறைகொணேன் முகத்து முக்கட்
    பொன்னிற மேனி யோடு
மறைபுகழ் வாம தேவன்
    வடதிசை யதனிற் காக்க. 8

இல கலசங்.

Koviloor Digital Library

அங்குசங் கபாலஞ் சூல
　　மணிவா தாப யங்கள்
சங்குமான் பாச மக்கந்
　　தமருகங் கரங்க ளேந்தித்
திங்களிற் றவள மேனி
　　திருமுக மைந்தும் பெற்ற
எங்களீ சான தேவ
　　னிருவிசும் பெங்குங் காக்க. 9
சந்திர மவுலி சென்னி
　　தனிநுதற் கண்ண னெற்றி
மைந்துற பகன்கண் டொட்டோன்
　　வரிவிழி யகில நாதன்

Koviloor Digital Library

கொந்துணர் நாசி வேதங்
கூறுவோன் செவி கபாலி
அந்தில்செங் கபோலந் தூய
வைம்முகன் வதன மூற்றும். 10

வளமறை பயிலு நாவ
ஞமணி நீல கண்டன்
களமடு பினாக பாணி
கையிணை தருமு வாகு
கிளர்புயந் தக்கன் யாகங்
கெடுத்தவ னமார்பு தூய
ஒளிதரு மேரு வில்லி
யுதாமன் மதனைக் காய்ந்தோன். 11

Koviloor Digital Library

இடையிப முகத்தோள் ருதை
யுற்றிரம் மீசன் மன்னும்
புடைவள ரொரு பேர
மித்திரன் பொருவில் வாரம்
படர்சக திசன் சானு
பாய்தரு மிடப கேது
மிடைதரு கணைக்கா லெற்றை
விமலன்செம் பாதங் காக்க. 12

வருபகன் முதல்யா மத்து
மகேசன்பின் னிரண்டாம் யாமம்
பொருவறு வாம தேவன்
புகன்றிடு மூன்றாம் யாமஞ்

செருமலி மழுவா ளெனைத்
திரியம்பக னாலாம் யாமம்
பெருவலி யிடப வூர்தி
பிணியற வினிது காக்க. 13
கங்குலின் முதல்யா மத்துக்
கலைமதி முத்தோன் காக்க
தங்கிய விரண்டாம் யாமஞ்
சானவி தரித்தோன் காக்க
பொங்கிய மூன்றும் யாமம்
புரிசடை யண்ணல் காக்க
பங்கமி னாலாம் யாமங்
கௌரிதன் பதியே காக்க. 14

Koviloor Digital Library

அனைத்துள கால மெல்லா
மந்தகற் கடந்தோ னுள்ளுந்
தனிப்பெரு முதலாய் நின்ற
சங்கரன் புறமுந் தானு
வனப்புறு நடுவுந் தூய
பசுபதி மற்று மெங்கு
நினைத்திடற் கரிய தோன்மைச்
சதாசிவ நிமலன் காக்க. 15

நிற்புழிப் புவன நாத
னேகுழி நிமல மேனிப்
பொற்பிர மதாதி நாத
னிருப்புழிப் பொருவி லாத

Koviloor Digital Library

அற்புத வேத வேத்திய
னருந் துயில் கொள்ளு மாங்கட்
டற்பர சிவன் வழிக்குச்
சாமள ருத்திரன் காக்க. 16

மலைமுதற் றுருக்கந் தம்பிற்
புராரிகாத் திடுக மன்னுஞ்
சிலைவலி வேட ருபன்
செறிந்தகா னகத்திற் காக்க
கொலை யமர் பத்தண்ட
கோடிகள் குலுங்க நக்குப்
பலபடி நடிக்கும் வீர
பத்திரன் முழுதுங் காக்க. 17

Koviloor Digital Library

பல்லுகளைப் புரவித் திண்டேர்
படுமதக் களிறு பாய்மா
வில்லுடைப் பதாதி தொக்கு
மிடைந்திடு மெண்ணில் கோடி
கொல்லியன் மாலை ஸ்வவேற்
குறுகலர் குறுகுங் காலை
வல்லிவோர் பங்கன் செங்கை
மழுப்படை தணித்துக் காக்க. 18

தத்துநீர்ப் புணரி யாடைத்
தாணியைச் சுமந்து மானப்
பைந்தலை நெடிய பாந்தட்
பஃறலை யனைத்துந் தேய்ந்து

Koviloor Digital Library

முத்தலை படைத்த தோகு
    மூரிவெங் கனல்கொள் சூலம்
பொய்த்தொழிற் கள்வர் தம்மைப்
    பொருதழித் தினிது காக்க.
மூடங்குளை முதலா யுள்ள
    முழுவலிக் கொடிய மாக்கள்
அடங்கலும் பிணைகள் கொல்க
    வென்றிவை யனைத்து முள்ளந்
திடம்பட நினைந்து பாவஞ்
    செயுஞ்சிவ கவசந் தன்னை
யுடன்படத் தரிப்பை யானு
    லும்பெரு குலவுந் தோளாய்.

Koviloor Digital Library

வேறு

பஞ்சபாதகங்கள்போம் பகைகண்மாய்ந்திடும்
அஞ்சலின்மறலியு மஞ்சியாட்செயும்
வஞ்சநோயொழிந்திடும் வறுமைதீர்ந்திடுந்
தஞ்சமென்றிதனை நீ தரித்தல்வேண்டுமால்.

சிவ கவசம் முற்றிற்று.

இஃது பிரமோத்தர காண்டம் சிவ கவசம் முரைத்த அத்தியாயத்துள் இருப்பது.

Koviloor Digital Library

உ

வச்சிரபஞ்சரமென்னும்

சத்தி கவசம்

தேவர்கள் தங்களுக்கு நெடுநாள் இடரிழைத்திருந்த தாரகனென்னும் அவுணனை உமாதேவியானவள் சங்கரித்து அவ்விடரை நீக்கியது கண்டு அத்தேவியை வணக்கஞ் செய்து துதி செய்தது இக்கவசமென்றறிக.

அங்கையிற் பாசந் தாங்கும்
பிரமாணி யருளி னேடுந்

Koviloor Digital Library

துங்கமென் சென்னி காக்க
வயிணவி துகளி லாகம்
எங்கணும் காக்க செய்ய
வேற்றெழி லுருத்தி ராணி
தங்குமென் டிசையு டன்பு
தழைத்திட வினிது காக்க.
கொன்னுனைச் சூலி சென்னி
மயிரினைக் குறித்துக் காக்க
மன்னுவெண் பிறைதாம் சென்னி
வயங்கொளி நெற்றி காக்க
பன்மயிர்ப் புருவ நாளும்
பரிவொடு முமையாள் காக்க

Koviloor Digital Library

என்னையாண் முகிலி னீச
னிறைவிகண் ணிணைகள் காக்க. 2
வயமிகு மிமைய வல்லி
மூக்கினை மகிழ்ந்து காக்க
செயையொடு விசயை மேல்கீ
ழிதழினைச் சிறந்து காக்க
வயிலுடைச் சுருதி தூய
வஞ்செவி காக்க தண்ணெண்
பயின்மல ருறையுஞ் செல்வி
பல்லினை புவந்து காக்க. 3
சண்டிமென் கபோலங் காக்க
தவளநாண் மலரின் வைகும்

Koviloor Digital Library

ஒண்டொடி நன்னாக் காக்க
விசயையன் கலைமற் றெவ்வாக்
கண்கவர் நாடி காக்க
காத்தியா யனியெஞ் ஞான்று
மூண்டக மலரிற் றூய
முகத்தினைச் சிறந்து காக்க.
காளமுண் டிருண்ட நீல
கண்டிமெல் லெழுத்துக் காக்க
கோளில்பூ தார சத்தி
சுவர்புறங் காக்க கூர்மி
நீரொளிச் சந்தி காக்க
வயிற்றிரி நெரியி லேடுந்

Koviloor Digital Library

தோளிணை காக்க பதுமை
　　துணைமல ரங்கை காக்க. ௫
கமலைகை விரல்கள் காக்க
　　விரசைகை யுகிர்கள் காக்க
திமிரமுண் டொளிரும் வெய்யோன்
　　மண்டலத் துறையுஞ் செல்வி
எமதிரு வாகு மூலங்
　　காக்கவா ணவர்க ளேத்த கவசம்.
அமிர்தல கரிநா ஞொளு
　　மன்மணி மார்பம் காக்க. ௬
தரித்திரி யிதயங் காக்க
　　தயித்தியர்ச் செகுப்போன் மிக்க

Koviloor Digital Library

கருத்தொடு மூலைகள் காக்க
    சகத்தினி லிறைமை பூண்டோ
டிருத்தகு வயிறு காக்க
    திகழ்போ கநிதன் னுள்ளத்
தருத்தியி னுந்தி காக்க
    வலைசவளர் முதுகு காக்க.

கருதரு விடை காக்க
    கடிதலம் பானை வாய்ந்த
குருமணிச் சகனங் காக்க
    குகிராணி குய்யங் காக்க
அருடர வருடு பாய
    கந்தினி யபானங் காக்க

7

Koviloor Digital Library

தெருளுடை விபுலை யென்றுஞ்
சிறப்புடைக் குறங்கு காக்க. 8
வளிதைமென் முழந்தாள் காக்க
வியற்சபை கணைக்கால் காக்க
களிதரு கோரை வாய்ந்த
பரட்டிணைக் காக்க மிக்க
அளிகொள்பா தலத்திற் செல்வோ
ளணிகெழு புறந்தாள் காக்க
ஒளிர்நகம் விரல்கள் சந்திரி
யுக்கிரி யுவந்து காக்க. 9
நலத்துறை மடந்தை யுள்ளங்
காலிணை காக்க தண்ணென்

Koviloor Digital Library

மலர்த்திரு மனையைக் காக்க
வயங்குகேத் திரதை யோங்கி
உலப்பில்கேத் திரங்கள் காக்க
பிரியகரை யொழிவ ரூது
நலத்தரு மக்க டம்மை
நன்குறக் காக்க வன்றே.
உயர்சரு தனியெஞ் ஞான்று
மொழிவறு மாயுள் காக்க
மயர்வறு சீர்த்தி யாவு
மாதேவி காக்க மிக்க
செயிறு தருமம் யாவுந்
தனுத்திரி சிறந்து காக்க

Koviloor Digital Library

இயல்புடைக் குலத்தை வாய்ந்த
குலதேவி யினிது காக்க. 11
சற்கதி பிரதை நல்லோ
ரிசைபினைத் தயாவிற் காக்க
விற்கொடும் போரி னீரில்
வெளியினில் வனத்திற் குழில்
இற்புற மதனி லெங்கு
சர்வாணி காக்க வென்றுப்
பொற்றரு மலர்க டூவிப்
புங்கவ ரேத்தி னாரே. 12

சத்தி கவசம் முற்றிற்று

இந்த வஞ்சிர பஞ்சரத்தை யாவர் செபித்தாலும், அவர்களுடைய தேகத்தி லுண்டாகிய வெப்புநோயொழியும். எட்டுத்தாஞ் சலத்தில் அபிமந்திரித்து அதனை உட்கொண்டால், வயிற்றிலே பொருந்திய குன்மம் சூலை முதலிய நோயனைத்தும் நீங்கும். இரவில் வழி நடக்கும் போது செபித்தால், பூதம் பேயிவைகள் தொடரமாட்டாவாம். பிள்ளையைப் பெறமாட்டாமல் வருத்தப்படுகின்ற மாதருடைய அருகிலிருந்து செபித்தாலும், அல்லது நீரிலோதி உட்கொள்

Koviloor Digital Library

ளக் கொடுத்தாலும், விரைவிலே வருத்தம் நீங்கிப் பிள்ளைகளைக் பெறுவார்கள். யுத்தத்திலே செபித்தால் சத்துருக்கள் தோல்வியடைவார்கள். சிறு பிள்ளைகளுக்கு நீரிலோதி உட்கொள்ளக் கொடுத்தால் வியாதிகள் நீங்கும். இதை யாவரோதினுலும், அவர்களை உமாதேவி காப்பாற்றுவாள்.

இஃது, காசிகாண்டம் வச்சிரபஞ்சாமுனைத்த அத்தியாயத்துள் இருப்பது.

—

Koviloor Digital Library

உ

சிவமயம்

சகலகலாவல்லிமாலையென்னும்

சரஸ்வதி தோத்திரம்

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்

Koviloor Digital Library

துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே. 2

Koviloor Digital Library

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலுந்

Koviloor Digital Library

தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. 4

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்
செந்நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே. 5

Koviloor Digital Library

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்

Koviloor Digital Library

திட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே. 7

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித் தையுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே. ௮

Koviloor Digital Library

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார் நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்ச ரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

9
மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்

Koviloor Digital Library

விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.

சரஸ்வதி தோத்திரம் முற்றிற்று.

Koviloor Digital Library

சிவமயம்

இலக்குமி தோத்திரம்

மூவுலகு மிடரியற்று கடலவுண
னுயிரொழிய முனிவு கூர்ந்த
பூவையுறழ் திருமேனி யருட்கடவு
ளகன்மார்பிற் பொலிந்து தோன்றித்
தேவருல கினும்விளங்குப் புகழ்க்கொல்லா
பூத்தினிது சேர்ந்து வைகும்

Koviloor Digital Library

பாவையிரு தாடொழுது பழமறைத்தா
குறுமுனிவன் பழிச்சு கின்றான். 1

கொழுநிதியிசை யளிமூரலுந் தாமரைமென்
பொருட்டிலுறை கொள்கை போல
மழையுறழுந் திருமேனி மணிவண்ண
னிதயமலர் வைகு மானே
முழுதுலகு மினிதீன்ற வருட்கொம்பே
காமல முகிழ்த்தெந் நாளுங்
கழிபெருங்கா தலிற்றொழுவோர் வினைதீர
வருள்கொழிக்குங் கமலக் கண்ணாய். 2

கமலைதிரு மறுமார்பன் மனைக்கிழத்தி
செழுங்கமலக் கையாய் செய்ய

Koviloor Digital Library

விளைபசுங் கழைநுழைக்கும் வேனிலான்
றனையீன்ற விந்தை தூய
அமுதரும்ம * மலர்க்கரத்தாய் பாற்கடலு
ளவதரித்தோ யன்பர் நெஞ்சத்
திமிரமகன் றிடவொளிருஞ் செழுஞ்சுடரே
யெனவணக்கஞ் செய்வான் மன்னே. 8

மடற்கமல நறும்பொருட்டி லரசிருக்குஞ்
செந்துவர்வாய் மயிலே மற்றுன்
கடைக்கணருள் படைத்தன்றோ மணிவண்ண
னுலகமெலாங் காவல் பூண்டான்

* கனதனத்தாய் எனவும் பாடம்.

Koviloor Digital Library

படைத்தனளுன் முகக்கிழவன் பசுங்குழவி
மதிபுனைந்த பரமன் றானும்
அடைத்தன்னின் பெருஞ்சீர்த்தி யெம்மனோரா
லெடுத்துச் செல்லற் பாற்றோ. 4

மல்லனெடும் புவியனைத்தும் பொதுநீக்கித்
தனிபுரக்கு மன்னர் யாருங்
கல்வியினிற் பேரறிவிற் கட்டழகி
னிகரில்லாக் காட்சியோரும்
வெல்படையிற் பகைதுரந்து வெஞ்சமரில்
வாகைபுனை வீரர் தாமும்
அல்லிமலர்ப் பொகுட்டுறையு மணியிழைநின்
னருணோக்க மடைந்து ளாரே. 5

Koyiloor Digital Library

செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்ந்தொளிரு
மெழின்மேனித் திருவே வேலை
அங்கணுல கிருளோக்கு மலர்கதிராய்
வெண்மதியாய் மார்க் கூட்டும்
பொங்கழலா யுலகளிக்கும் பூங்கொடியே
நெடுங்காவிற் பொருப்பின் மண்ணில்
எங்குளை நீ யவணன்றோ மல்லல்வளஞ்
சிறந்தோங்கி யிருப்ப தம்மா. 6

என்றுதமிழ்க் குறுமுனிவன் பன்னியொடு
மிருநிலத்தி லிறைஞ்ச லோடும்
நன்றுணரு மதிமகிழ்ந்தோ ரான்மறையோ
யித்துதியை நவின்றோர் யாரும்

Koviloor Digital Library

பொன்றலரும் பெரும்போக நுகர்ந்திடுவ
ரிங்கிதனைப் பொறித்த வேடு
மன்றன்மனை யகத்திருப்பின் வருமைதரு
தவ்வையவண் மருவல் செய்யாள். 7

இலக்குமி தோத்திரம் முற்றிற்று.

இஃது, காசிகாண்டம் அகத்தியர் விந்தவரையடைந்த அத்தியாயத்தில் இருப்பது.

Koviloor Digital Library

அருட்பெருஞ்ஜோதி
சிதம்பரம் - இராமலிங்க சுவாமிகள்
இயற்றிய

திரு அருட்பா

விநாயகர் தோத்திரம்

மூன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே—மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்தாள் சரண்.

Koviloor Digital Library

உலகெலாந் தழைப்ப வருண்மத வருவி
யொழுகுமா முகமுமைக் காரும்
இலகுசெம் மேனிக் காட்சியு மிரண்டோ
டிரண்டென வோங்குதிண் டோளுந்
திலகவா ணுதலார் சித்திபுத் தியிளைச்
சேர்த்தணைத் திடுமிரு மருங்கும்
விலகுறு தெளியேன் விழைந்தனன் சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 1

நாதமுங் கடந்து நிறைந்து நின்மயமே
நானென அறிந்துநான் ருனைய்-
பேதமுங் கடந்த மௌனராச் சியத்தைப்
பேதையே பிடிப்பதெந் நாளோ

Koviloor Digital Library

ஏதமுஞ் சமய வாதமும் விடுத்தோர்
இதயமும் ஏழையேன் சிரமும்
வேதமுந் தாங்கும் பாதனே சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 2

கானல்நீர் விழைந்த மானென வுலகக்
கட்டினை நட்டுழன் றலையும்
ஈனவஞ் சகநெஞ் சகப்புலை யேனை
என்றுகொண் டருளுநா ளுளதோ
ஊனமொன் றில்லா வுத்தம ருளத்தே
ஓங்குசீர்ப் பிரணவ வொளியே
வேனவில் காத்தோர்க் கினியவா சித்தி
விநாயக விக்கினேச் சுரனே. 3

Koviloor Digital Library

முன்னருந் தவத்தோன் முற்கலன் முதலா
முனிவர்க ளினிதுவீ டடைய
வின்னருள் புரியு நின்னருட் பெருமை
யிரவினும் பகலினு மறவேன்
என்னரும் பொருளே யென்னுயிர்க் குயிரோ
யென்னா சேயென துறவே
மன்னரு நெறியின் மன்னிய வறிவே
வல்லவைக் கணேசமா மணியே,
திருவுங் கல்வியுஞ் சீருஞ் சிறப்புமுன்
திருவடிப்புகழ் பாடுந் திறமும்நல்
உருவுஞ் சீலமு மூக்கமுந் தாழ்வுறு
உணர்வுந் தந்தெனை யுள்ளத் தமர்ந்தவா

Koviloor Digital Library

குருவுந் தெய்வமு மாகிஅன் பாளர்தங்
குறை தவிர்க்குங் குணப்பெருங் குன்றமே
வெருவுஞ் சிந்தை விலகக் கஜானனம்
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 5

சீத நாண்மலர்ச் செல்வனு மாமலர்ச்
செல்வி மார்பகச் செல்வனுங் காண்கிலாப்
பாத நாடொறும் பற்றறப் பற்றுவோர்
பாத நாடப் பரிந்தருள் பாலிப்பாய்
நாத நாடிய வந்தத்தி லோங்குமெய்ஞ்
ஞான நாடக நாயக நான்கெனும்
வேத நாடிய மெய்ப்பொரு ளேயருள்
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 6

Koviloor Digital Library

தஞ்ச மென்றுனைச் சார்ந்தன னேநினைதநீ
தானு மிந்தச் சகத்தவர் போலவே
வஞ்ச மெண்ணி யிருந்திடி லென்செய்வேன்
வஞ்ச மற்ற மனத்துறை யண்ணலே
பஞ்ச பாதகந் தீர்த்தனை யென்றுநின்
பாத பங்கயம் பற்றினன் பாவியேன்
விஞ்ச நல்லருள் வேண்டித் தருதியோ
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே.

கள்ள நெஞ்சக னாயினு மையநான்
கள்ள மின்றிக் கழறுகின் றேனெனது
உள்ள நின்றிரு வுள்ள மறியுமே
ஓதுகின்ற தென் போது கழித்திடேல்

Koviloor Digital Library

வள்ள மாமலர்ப் பாதப் பெரும்புகழ்
வாழ்த்தி நாத்தழும் பேற வழங்குவாய்
வெள்ள வேணிப் பெருந்தகை யேயருள்
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 8

மண்ணி லாசை மயக்கற வேண்டிய
மாத வர்க்கு மதிப்பரி யாயுனை
எண்ணி லாச்சிறி யேனையு முன்னின்றே
யேன்று கொண்டனை யின்று விடுத்தியோ
உண்ணி லாவிய நின்றிரு வுள்ளமு
மாசை யோடுவர்ப் புங்கொள வெண்ணுமோ
வெண்ணி லாமுடிப் புண்ணிய மூர்த்தியே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 9

Koviloor Digital Library

ஆணி வேயன்றி யாருமிப் பெண்களிலே
அலியி லேயிவ் வடியனைப் போலவே
காணி லேயொரு பாவியை யிப்பெருங்
கள்ள நெஞ்சக் கடையனை யாளையா
ஏணி லேயிட ரெய்த விந்த்தியேல்
என்செய் கேனினி யிவ்வுல கத்திலே
வீணி லேயுழைப் பேனரு ளையனே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 10

நாவினா லுனை நாடோறும் பாடுவார்
நாடுவார் தமை நண்ணிப் புகழவும்
ஓவிலா துனைப் பாடவுந் துன்பெலாம்
ஓட வும்மகி ழோங்கவுஞ் செய்குவாய்.

Koviloor Digital Library

காவி நேர்களத் தான்மகி ழைங்கரக்
கடவுளே நற் கருங்குழி யென்னுமூர்
மேவி யன்பர்க் கருள்கண நாதனே
விளங்குஞ் சித்தி விநாயக வள்ளலே. 11

கலி விருத்தம்

அற்புதக் கணபதி யமல போற்றியே
தற்பர சண்முக சாமி போற்றியே
சிற்பர சிவமகா தேவ போற்றியே
பொற்பமர் கௌரிநிர் போற்றி போற்றியே.

வாணீஸ்வரி அச்சகம், சென்னை—1. (1955.)

Koviloor Digital Library

A. No. 15261

LIBRARY, KOVILOOR

Koviloor Digital Library

வாகீஸ்வரீ

பாராயண பதிப்புகள்

	அ.	பை.
திருப்பாவை	4	0
திருமாலை	4	0
கந்தர் சஷ்டி கவசம்	4	0
கந்தரலங்காரம்	4	0
கந்தர் அநுபூதி	4	0
திருமுருகாற்றுப்படை	4	0
விநாயக கவசம்	4	0
நவரத்தினத் திருப்புகழ்	3	0
கந்தர் கலிவெண்பா	3	0
இடும்பன் கவசம்	3	0
கந்தர் கவசம்	2	0
சண்முக கவசம்	2	0

ஆர். ஜி. பதி கம்பெனி,
4, வெங்கடாராமய்யர் தெரு,
சென்னை-1.